

# புதிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்னை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டின் மதிப்பீடு.



## உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | | நிறைவேற்றுப் பொழிப்பு | 1 |
| 2. | | அறிமுகம் | |
| | 2.1 | நிறுவன பின்னணி | 4 |
| | 2.2 | கணக்காய்வின் நோக்கங்கள் | 5 |
| | 2.3 | தொடர்புடைய நிறுவனங்கள் | 6 |
| | 2.4 | அளவுகோல்கள் | 6 |
| | 2.5 | கணக்காய்விற்கான அதிகாரம் | 7 |
| | 2.6 | கணக்காய்வு விடயப்பரப்பு | 7 |
| | 2.6.1 | சர்வதேச நியமங்களுக்கு இணங்குதல் | 7 |
| | 2.6.2 | விடயப்பரப்பு | 7 |
| | 2.7 | கணக்காய்வு நடைமுறை | 8 |
| | | | |
| 3. | | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் | 9 |
| | 3.1 | நிறுவன ரீதியான பின்னணி மற்றும் இச் செயற்பாட்டிற்கான தயார்படுத்தல் | |
| | 3.1.1 | இலங்கையின் தேசிய வலு கொள்கை மற்றும் தந்திரோபாயங்கள் | 9 |
| | 3.1.2 | சட்டரீதியான பின்னணி | 11 |
| | 3.2 | புதிய புதுப்பிக்கத்தக்க வலு (NRE) மூலங்களின் அபிவிருத்திச் செயன்முறை | 12 |
| | 3.2.1 | 2030 மற்றும் 2050 அளவில் அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகளுக்கான குறுகிய கால இலக்குகள் | 12 |
| | 3.2.2 | செயற்திட்டத்திற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 12 |
| | 3.3 | நிலைபேறான வலு அதிகாரசபையின் கீழ் செயற்திட்டங்களை செயற்படுத்தல் | 14 |
| | 3.3.1 | புதிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி செயற்திட்டங்களை செயற்படுத்தல் | 14 |
| | 3.3.2 | அங்கீகரிக்கப்பட்ட போதும் உடன்படிக்கை கைச்சாத்திடாமை | 14 |
| | 3.3.3 | கிடைத்த விண்ணப்பங்களை விரைவில் கருத்திற் கொள்ளல் | 15 |

| | | | |
|---|---|---|---|
| | 3.4 | குறைந்த கிரய நீண்டகால பிறப்பாக்கி விரிவாக்கல் திட்டம் (Least Cost Long Term Generation Expansion Plan) | 17 |
| | 3.4.1 | திட்டத்தைத் தயாரித்தல் | 17 |
| | 3.4.2 | நீண்டகால பிறப்பாக்கி விரிவாக்க திட்டத்தின் (LTGEP) பிரகாரம் புதுப்பிக்க கூடிய வலுச்சக்தி இலக்கு | 17 |
| | 3.4.3 | புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான போட்டி அடிப்படையிலான விலைமனுக் கோரல் | 18 |
| | 3.4.4 | செயற்பாட்டிலுள்ள **NRE** செயற்திட்டங்களிலிருந்து கொள்வனவு செய்த மின்சாரத்திற்காக குறித்த பிரகாரம் கொடுப்பனவு செய்தல் | 21 |
| | 3.5 | பொது விடயங்கள | 22 |
| | 3.5.1 | வலுச்சக்தி உற்பத்தி தொடர்பாக தற்போது காணப்படும் சவால்கள் | 22 |
| | 3.5.2 | சூரிய சக்தி போர் (Battle for Solar Power) | 23 |
| | 3.5.3 | சுற்றுச்சூழல் பொருத்தம் | 24 |
| | 3.6 | நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைந்து கொள்ளல் (Sustainable Development Goals-07) | 24 |
| 4. | 3.6.1 | மொத்த வலுச் சக்தி உற்பத்தி இயலளவு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி உற்பத்தி | 24 |
| 5. | 3.6.2 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள | 25 |
| 6. | | பரிந்துரைகள | 26 |
| 7. | | பின்னிணைப்பு | 28 |

## 1. நிறைவேற்றுச் பொழிப்பு

நாட்டின் மொத்த வலுச்சக்தி தேவையில் அதிகளவில் மின்சக்தியில் தங்கியிருப்பதுடன் மொத்த மின் உற்பத்தியில் 63 சதவீதமான எரிபொருள் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. இதற்காக வருடாந்தம் அதிக அளவு அமெரிக்க டொலர்களை செலவிடுவதனை காரணமாக கொண்டு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அந்நியச் செலாவணி பிரச்சினைகளுக்கு அவசர மின்வெட்டுகளுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலாதாரங்களுடன் தொடர்புபட வேண்டியதன் முக்கியத்துவம் தற்போது தெளிவாகின்றது. 2020 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலு (Renewable Energy) உற்பத்தி மொத்த வலு வினியோகத்தின் 37 வீதமாக காணப்படுவதுடன் புதிய புதுப்பிக்கத்தக்க வலு (New Renewable Energy - NRE) உற்பத்தி மொத்த வலு வினியோகத்தின் சுமார் 12 வீதம் மாத்திரமாகும். இலங்கையின் புவியியல் ரீதியான அமைவின் அடிப்படையில் அதிகளவிலான காற்று மற்றும் சூரிய வலு வளம் காணப்படுவதுடன் தற்போதைய பயன்பாடானது ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவாகும். புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாட்டின் மூலம் பச்சைவீட்டு வாயு வெளியேற்றம் குறைதல், புவி வெப்பம் அதிகரித்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் பொசில் எரிபொருள் இறக்குமதி மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது ஏற்படும் அழுத்தத்திலிருந்து பாதுகாக்கவும் உதவியாக இருக்கும். தற்போதைய அரச கொள்கைக்கமைவாக 2030 ஆம் ஆண்டளவில் மொத்த புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தியை 70 வீதமாக அதிகரித்துக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் அனல் மின் உற்பத்தி நிலையங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் புதுப்பிக்கத்தக்க வலுவினை மேம்படுத்திக்கொள்ளும் செயற்பாட்டின் செயலாற்றலினை மதிப்பீடு செய்தல் இச் செயலாற்றல் கணக்காய்வின் நோக்கமாக உள்ளதுடன் இங்கு கணக்காய்வு விடயப்பரப்பு மொத்த புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தியை மேம்படுத்தலினுள் புதிய புதுப்பிக்கத்தக்க வலுவினை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டினை மதிப்பிடுவதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டது. இங்கு வெளிப்படுத்தப்பட்ட பிரதான அவதானிப்புகளில் வலு கொள்கைக்கு அமைவாக 2050 இல் அனைத்து வலு வினியோக தளங்களினதும் பூரண இயலளவினை அடைந்துகொள்வதற்கு (பிரிவுச் சமநிலை) திட்டமிடப்பட்ட போதும், இ.மி.ச. சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022-2041 குறைந்த கிரயத்திலான நீண்ட கால உற்பத்தித் திட்டத்தின் படி, 2041 ஆம் ஆண்டு வரையிலும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் மூலம் மின் உற்பத்தி 50 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் 02 அனல் மின் நிலையங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களை தொடர்ச்சியாக நிர்மாணிப்பதன் மூலம் வலு கொள்கையின் மூலம் திட்டமிடப்பட்டவாறு 2050 இல் பூரண இயலளவினை அடைந்துகொள்ள முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் நிலைபேறான வலு அதிகாரச் சட்டம் மற்றும் தேசிய வலுக் கொள்கையின் அதிகாரங்களுக்கமைவாக மையப்படுத்தப்பட்ட இணைப்பு வழிமுறையொன்றின் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு திட்டங்களை அனுமதிக்கும் சிக்கலான செயற்பாட்டிற்காக செலவிடப்படும் 02 வருடத்திற்கும் கூடுதலான நீண்ட கால எல்லையினை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி (திருத்தப்பட்ட) சட்டத்தின் 43(4) பிரிவின் பிரகாரம் புதிய உற்பத்தி இயந்திரமொன்றினை வழங்குதல், நீடித்தலுக்கான போட்டி அடிப்படையிலான விலைகளின் கீழ் குறைந்த செலவின் அடிப்படையில் விலைமனுக் கோரல் மூலம் வலுவினைக்

கொள்வனவு செய்வதற்கான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மின்சார சபையினால் அனுமதிக்கப்பட்ட அறவீட்டு முறைமையின் கீழ் நிலைபேறான வலு அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்டிருந்த மெகா வொட் 4014.84 உடன் தொடர்பான 1,374 திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை கைச்சாத்திடல் 2017 ஜனவரி 01ஆம் திகதி முதல் திடீரென நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் 2017 முதல் இதுவரை நிலைபேறான வலு அதிகார சபையின் மூலம் மின் நிலையங்களை அமைப்பதற்காக அபிவிருத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் மற்றும் கட்டணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் அத் திட்டங்கள் தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

போட்டி அடிப்படையிலான விலை முறைமையின் கீழ் தேசிய மின்சக்தி தொகுதிக்கு 2017 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை 1 மெகா வொட் அளவிலான 13 திட்டங்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தன. காற்று வலு மின் உற்பத்தி ஆலைகளின் அபிவிருத்தி தொடர்பாக தற்பொழுது 60 மெகா வொட் இயலளவு கொண்டவைகளிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சூரிய வலு யுகம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மெகா வொட் 269 ஆகிய இயலளவு மாத்திரம் மத்திய வலையமைப்புக்கு தொடர்பு படுத்தப்பட்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. புதுப்பிக்கத்தக்க வலு வினியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மின்சாரத்திற்கான கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் காரணமாக வட்டிதொகை ஒன்றினை செலுத்த வேண்டி ஏற்படும் நிலையும் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றங்கள் தொடர்பான கட்டமைக்கப்பட்ட கொள்கையின் கீழ் உலக வெப்பநிலை அதிகரிப்பினை $2C^{o}$ இற்கு குறைவாக வைத்துக்கொள்ளும் உலகலாவிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எரிபொருள் மின் நிலையங்களுக்குப் பதிலாக இரட்டைப் பயன்பாடு கொண்ட வாயு மின் நிலையங்களை (LNG) அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் ஒரு மின் நிலையமேனும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலைமை டீசல் மின் நிலையங்களிலிருந்தான அவசர கொள்வனவுகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாக இருந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட முக்கிய அவதானிப்புகளின் அடிப்படையில், வலு செயற்திட்டங்களுடன் தொடர்பான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதத்தினை குறைக்கும் வகையில் இணைப்பீட்டு வழிமுறையொன்றினை ஏற்படுத்த வேண்டியுள்ளதுடன் நீண்ட கால உற்பத்தித் திட்டத்தினைத் தயாரிக்கும் பொழுது தேசிய வலுக் கொள்கை மற்றும் சர்வதேச அங்கீகாரங்களின் அடிப்படையில் அமைதல் வேண்டும். 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் இலங்கை மின்சார சபையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறவீட்டு முறைமையின் கீழ் கொள்வனவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாத தற்பொழுது உற்பத்தி அனுமதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள மற்றும் ஆலோசனைக் கடிதம் வழங்கப்பட்ட திடங்கள் தொடர்பிலான ஒரு தீர்மானத்திற்கு வருவதும் முக்கியமாகும். சிறிய அளவிலான திட்டங்களுக்காக உள்நாட்டு முதலீட்டாளர்களை மாத்திரம் சம்பந்தப்படுத்திக் கொள்வதன் மூலம் வெளிநாட்டு செலாவணியை தக்க வைத்துக்கொள்வதற்கும் உள்நாட்டுப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் முக்கியமாகும். தற்போது முகங்கொடுக்க நேர்ந்துள்ள உலகலாவிய தொற்று (Covid -19) நிலைமையின் கீழ் அபிவிருத்தி செயற்பாட்டை வேகமாக்குதல் மற்றம் அந்நியச் செலாவணி ஒதுக்கீடு சிக்கலுடன் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துவது முக்கியமாகும். மேலும் சூரியக் கல தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் சூரிய வலுவினை களஞ்சியப்படுத்தி வைத்து மின்சாரத்திற்கான கேள்வி மிகக் கூடுதலாக உள்ள (நெரிசல் நேரம்) காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கு

நடவடிக்கை எடுத்தலும் பொருத்தமானதாகும். நிறுவன ரீதியான சமூகர் பொறுப்பு திட்டங்களை (CSR) செயற்படுத்துவதன் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு உட்கட்டமைப்பு வசதிகள் திட்டங்களை நிர்மாணிக்கும் போது ஏற்படும் பொது எதிர்ப்புகள் மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 2. அறிமுகம்

### 2.1 நிறுவன ரீதியான பின்னணி

புதுப்பிக்கத்தக்க வலு எனப்படும் ‘‘மீள் இயக்கத்திற்கு உள்ளாக்கக்கூடிய வலு வளம்’’ என்பதன் மூலம் தமது பயன்பாட்டிற்காக எதிர்கால சந்ததியினரால் பயன்படுத்துவதற்காக உள்ள சந்தர்ப்பத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் இலங்கைக் குயெரசின் நிலப் பிரதேசத்தினுள் பயன்படுத்தக்கூடிய சூரிய வெப்பம் அல்லது நில வெப்பத்தின் செயற்பாட்டின் ஊடாக எழுகின்ற சக்தி அல்லது வெப்ப வலு மூலங்கள் எனக் கருத்துக் கொள்ளப்படுவதுடன், இதில் உயிரியல் இயக்க வலு, நீர் மின் வலு, சூரிய வலு மற்றும் காற்று வலு ஆகியன அடங்குகின்றன. தற்பொழுது புதுப்பிக்கத்தக்க வலு (New Renewable Energy - NRE) அதாவது சிறிய நீர் மின் நிலையங்கள் (Mini Hydro), சூரிய வலு (Solar power), காற்று வலு (Wind Power), உயிரியல் இயக்க (டீழைஅயளள) மற்றும் கழிவு (Agricultural, Industrial & Municipal Waste) ஆகிய விலை குறைந்த சூழல் நேய வலு மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேவை பெரிதும் உணரப்பட்டுள்ளது. மீள் உற்பத்தி செய்ய முடியாத பொசில் எரிபொருட்கள் வேகமாக அழிவடைந்து வருவதன் காரணமாகவும் நீண்ட கால வலு திட்டங்களின் கீழான நிலக்கரி மின் ஆலைகள் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக தொழிற்படாமல் இருந்ததன் காரணமாகவும் எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய கேள்விக்கு நிகராக நம்மபகரமான முறையில் தொடர்ச்சியாக மின்சாரத்தினை வினியோகம் செய்வதென்பது சந்தேகமான நிலையில் உள்ளது.

இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபை (Focal National Entity for Sustainable Energy) வலு பாதுகாப்பான இலங்கையின் (தூரநோக்கு) கீழ் உள்நாட்டு வலு வள அபிவிருத்தி மற்றும் ஆய்வு, வள உற்பத்தி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் அறிவு முகாமைத்துவம் மூலம் வலு பாதுகாப்பிற்கான பங்களிப்பை வழங்கி இயற்கை, மனித செயற்பாட்டு மற்றும் பொருளாதார வளங்களை நிலைபேறான வழமையான வழிகளில் உறுதி செய்து இலங்கையில் வலுப் பாதுகாப்பினை கைப்பற்றிக்கொள்ளும் மொத்தச் செயற்பாட்டில் நாட்டின் வழிகாட்டியாக (பணிக்கூற்று) செயற்படுகின்றது. வலு பாதுகாப்பு மற்றும் தன்னிறைவுக்காக புதுப்பிக்கத்தக்க வலு வகைகளை உச்ச அளவில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபை (Focal National Entity for Sustainable Energy) செயற்படுகின்றது. பொருத்தமான ஒரு மின்சாரக் கொள்கையினை ஏற்படுத்தல், புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி, வலு வினைத்திறன் ஏற்படும் வகையில் கேள்வியை முகாமைத்துவம் செய்தல் ஆகியன இவ் விடயப் பரப்பில் அடங்குகின்றன.

2020 ஆம் ஆண்டு புதிய புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தி மொத்த வலு வினியோகத்தின் 12 வீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன் பாரியளவிலான நீர் மின் நிலையத்தின் பங்களிப்பு 25 சதவீதமாகும். ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் ஏனைய உலகலாவிய உடன்படிக்கைகளுடன் இணைந்து செல்லல் மற்றும் தற்போதய அரசின் கொள்கையின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்க தக்க வலுவினை 70 சதவீதம் வரை அதிகரிப்பதற்குமுட் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பாரியளவிலான நீர் மின்நிலையங்களின் உற்பத்தி இயலளவை உயர்ந்த அடிப்படையில் அடைந்துள்ள பின்னணியில் மேலும் அதிகரித்துக் கொள்வதற்கும் இயலுமை புதிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி மூலாதாரங்கள் மூலம் மாத்திரமாகும்.

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலு அதிகார சபை சட்டத்தின் அடிப்படையிலான பிரதான நோக்கங்களாவன

(அ) மீள் இயக்கக்கூடிய வலு வளங்களை (RE) இனங்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

(ஆ) வலு வினைத்திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலு பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல், முன்னேற்றல், செயற்படுத்தல் மற்றும் முகாமை செய்தல்.

(இ) வலு வினியோகம் தொடர்பான பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் செலவின் உண்மைத்தன்மையினை முன்னேற்றமடையச் செய்தல்

(ஈ) வலுக்களின் குறைந்த பொருளாதார செலவிற்கு (இறக்குமதி செய்யப்பட்ட வலுக்களில் தங்கியிருப்பதை குறைத்தல்) மற்றும் வலுக்களின் பாதுகாப்புடன் இணக்கமடையும் வகையில் அதிகார சபைக்கு தனது நோக்கங்களை செயற்படுத்துவதற்கு போதிய நிதி காணப்படுவதை உறுதி செய்தல்.

இதற்காக சேநு செயற்திட்டம் தொடர்பான அனுமதி மற்றும் மதிப்பீட்டு வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்து முதலீட்டாளர்கள் மத்தியில் பரவலடையச் செய்தல் அதாவது வலுத் துறையின் வினைத்திறன், விளைவு, பொருளியல் ரீதியான பெறுமதி ஏற்படும் வகையில் மற்றும் சூழல் சமநிலையை பேணி செயற்படல் அதிகார சபையின் கடமையாகும். இங்கு வலு வினியோக முகாமைத்துவம் (Supply Side Management) மற்றும் வலு கேள்வி முகாமைத்துவம் (Demand Side Management) ஆகியன தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதுடன் அச் சட்டத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் மூலம் பின்வரும் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கையின் மின்சார தொழில்துறைக்கான தொழில்நுட்ப, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாட்டாளராகச் செயற்படுதல் மற்றும்

(அ) மின்சார உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய செயற்பாட்டை செயல்படுத்துதல்.

(இ) மின்சார வணிகங்களில் விதிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகளைஒழுங்குபடுத்துதல்.

(ஈ) (46) பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்களுக்கு வருடாந்த வரி விதிக்கப்படும்.

## 2.2 கணக்காய்வின் நோக்கம்

புதிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்யும் செயல்பாட்டில் புதிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும்

செயல்படுத்தும் செயல்முறையின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் இந்த கணக்காய்வின் நோக்கமாகும்.

**2.3 தொடர்புடைய நிறுவனங்கள்**

புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பங்கு பற்றிய பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| நிறுவனம் | செயற்பாடுகள் |
|---|---|
| (அ) மின்சக்தி அமைச்சு | கொள்கை உருவாக்கம் மற்றும் மேற்பார்வை |
| (ஆ) இலங்கை மின்சார சபை | எரிசக்தி ஒப்பந்தங்களில் (SPPA) ஈடுபடுதல் |
| (இ) பொது பயன்பாட்டு ஆணைக்குழு | மின் உற்பத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் |
| (ஈ) மத்திய சுற்றாடல் அதிகாரசபை | சுற்றாடல் பொருத்தத்தை கருத்தில் கொண்டு சான்றிதழ்களை வழங்குதல் |
| (உ) காணி ஆணையாளர் நாயக திணைக்களம் | செயற்திட்டங்களுக்காக காணிகளை கையளிக்கும் செயற்பாடு |
| (ஊ) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் | செயற்திட்டங்களுக்கான தகுதிக்கான சான்றிதழ்களை வழங்குதல் |
| (எ) வன பாதுகாப்பு திணைக்களம் | |
| (ஏ) நீர்ப்பாசனத் திணைக்களம் | செயற்திட்டங்களுக்கான தகுதிக்கான சான்றிதழ்களை வழங்குதல் |
| (ஐ) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | செயற்திட்டங்களுக்கான தகுதிக்கான சான்றிதழ்களை வழங்குதல் |
| (ஒ) இலங்கை முதலீட்டுச் சபை | முதலீட்டு அனுமதியை வழங்குதல் |
| (ஓ) இலங்கை மகாவலி அதிகாரசபை | செயற்திட்டங்களுக்கான தகுதிக்கான சான்றிதழ்களை வழங்குதல் |

**2.4 அளவுகோல்கள்**

பின்வரும் அளவுகோல்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

(அ) மின்சாரம் மற்றும் வலு சக்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட தேசிய எரிசக்திக் கொள்கை

(ஆ) அமைச்சின் புதுப்பிக்கத்தக்க சக்தி ஏற்பாடுகள்

(இ) இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபை சட்டம் மற்றும் விரிவான வழிகாட்டுதல்கள் செயல் திட்டங்களில் உள்ளடங்கிய மற்றும் நோக்கங்கள்

(ஈ) இலங்கை மின்சார சட்டம் மற்றும் திருத்தங்கள்

(உ) பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்

(ஊ) நீண்ட கால உற்பத்தி திட்டத்தின் (LTGEP) நோக்கங்கள்

(எ) சர்வதேச மின்சக்தி முகவர் நிறுவனங்களின் பரிந்துரைகள்.
(பாரிஸ் மாநாடு)

(ஏ) ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மாநாட்டின் (UNFCCC) இணக்கப்பாடுகள் (COP- 26)

**2.5 கணக்காய்விற்கான அதிகாரம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 3(1)ஈ, 5(2) மற்றும் 12(ஏ) பிரிவுகளின் கீழ் எனது பணிப்பின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**2.6 கணக்காய்வின் விடயப்பரப்பு**

**2.6.1 சர்வதேச நியமங்களுக்கு இணங்குதல்**

என்னால் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 3000-3200) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

**2.6.2 விடயப் பரப்பு**

புதிய புதுப்பிக்கத்தக்க வலு வகைகளில் சிறிய நீர் மின்சார நிலையங்கள், சூரிய, காற்றாலை ஆகிய வகைகளுடன் ஒப்பிடுகையில் உயர் இயலுமை காணப்படுவதன் காரணமாகவும் மற்றும் அதனுடன் தொடர்பான அபிவிருத்திச் செயன்முறையின் பல்வேறு கட்டங்களில் காணப்படும் செயற்திட்டங்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதன் காரணமாகவும் விபரமான கணக்காய்வு மேற்குறிப்பிட்ட புதிய புதுப்பிக்கத்தக்க வலு வகைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. கணக்காய்வு வழிகாட்டி, அரசியலமைப்புச் சட்டம் மற்றும் கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைவாக கணக்காய்வு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன.
2016 – 2019 காலப்பகுதியினுள் நிலைபேறான வலு அதிகார சபையின் மூலம் அனுமதிப்பத்திரம் வழங்கல், செல்லுபடியற்றதாக்கல் மற்றும் செயற்படுத்தல், அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக பரிசோதனை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட துறையினரின் கடமைப் பொறுப்புகளை மதிப்பீடு செய்தலும் இக் கணக்காய்வில் அடங்கியுள்ளது.

புதிய புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி மதிப்பீட்டின் போது காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையாக தொழில்நுட்ப மற்றும் துறைசார்ந்த விசேட நிபுனத்துவ அறிவு கணக்காய்விற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் போதியளவு சுயாதீன தொழில்நுட்ப ஆராய்ச்சி தகவல்கள்

காணப்படாமை காரணமாக ஆவணங்கள் மற்றும் வழிகாட்டி அடிப்படையிலான விடயங்களுக்கு மாத்திரம் கணக்காய்வு மட்டுப்படுத்தப்பட்டது.

## 2.7 கணக்காய்வு நடைமுறைகள்

பெறுபேற்றினை இலக்காகக் கொண்ட ஆரம்பத்தினை (Result Oriented) அடிப்படையாகக் கொண்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஆரம்பத்தின் மூலம் இக் கணக்காய்வுப் பரிசோதனைக்காக குறித்த அத்தாட்சிகள் சேகரித்துக்கொள்ளப்பட்டன.

(அ) புதிய புதுப்பிக்கத்தக்க வலு வகைகளின் அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டுடன் தொடர்பான சட்டங்கள், தேசிய கொள்கைகள், நீண்ட காலத் திட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் வேறு ஆவணங்களின் ஆய்வு.

(ஆ) புதிய புதுப்பிக்கத்தக்க வலு வகைகளின் அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டுடன் நேரடியாக சம்பந்தப்படும் நிறுவனங்களிலிருந்து தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் மீளாய்வு செய்தல்

(இ) புதிய புதுப்பிக்கத்தக்க வலு தொழிலாளர்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரனைகள் மற்றும் குறித்த ஏனைய ஆவணங்களின் சுருக்கம்.

(ஈ) சர்வதேச அமைப்புகளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பரிகோதனை.

(உ) ஊடக அறிக்கை ஆய்வு மற்றும் பரிகோதனை

(ஊ) கிரய நலன் மீளாய்வு (Cost Benefit Analysis)

(எ) சாத்திய வள ஆய்வு அறிக்கை மற்றும் செயற்திட்ட ஒப்பந்த பரிசோதனை

## 3. விரிவான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள்

### 3.1 நிறுவன ரீதியான பின்னணி மற்றும் இச் செயற்பாட்டிற்கான தயார்படுத்தல்

#### 3.1.1 இலங்கையின் தேசிய வலு கொள்கை மற்றும் தந்திரோபாயங்கள்

3.1.1.1 இலங்கையின் எதிர்கால இலக்குகள், தற்போதைய உலகலாவிய வலு நிலைமைகள், ஐக்கிய நாடுகளின் ஏழாவது நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கருவிற்கு அமைவாக இலங்கையின் தேசிய வலு கொள்கை மற்றும் தந்திரோபாயங்கள் (வர்த்தமானி இலக்கங்கள் 2135/61 – 2019-08-09) தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் 2050 இல் அனைத்து வலு வினியோக வலையமைப்புகளின் பூரண வெளியீட்டினை அடைந்துகொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. வெளிச் சூழலில் நடைபெறக்கூடிய குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன் இசைவாக்கமடைந்து செல்லும் நோக்கில் வலுக் கொள்கைகளை மீளாய்வு செய்ய வேண்டியிருந்த போதும் 2008ன் தேசிய கொள்கை மீளாய்வு 2019 இல் அதாவது 11 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இலங்கையின் மின்சார வினியோகத்திற்காக வலு உற்பத்தி செய்யும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வலு தொடர்பான தேசிய கொள்கையின் தற்போதைய நிலை முக்கியமானதாக இருந்த போதும் தேசிய கொள்கையுடன் இணங்காது குறித்த செயற்திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு செயற்படுத்தப்படும் நிலை 2019 வரை கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

3.1.1.2 அரசின் மின்சார அபிவிருத்தி கொள்கையின் அடிப்படை நோக்கம் சமூக அபிவிருத்திக்கு கைகொடுக்கக்கூடிய பயன்பாட்டிற்கு இலகுவான, குறைந்த விலையில் வினியோகிக்கப்படக்கூடிய, தூய நம்பகரமான மற்றும் பொருளாதார சாத்தியப்பாட்டைக் கொண்ட வலு வினியோகத்தினை உறுதி செய்வதாகும். புதிய புதுப்பிக்கத்தக்க வலு கொள்கை மற்றும் அதன் வளர்ந்து வரும் பாத்திரத்திற்கு சந்தர்ப்பத்தை வழங்கி புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய அவ்வாறான புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை அதிகளவில் வலு பிரவாகத்தினுள் இணைத்துக்கொள்வதற்கு, காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய சவால்களை வெற்றி கொள்வதற்கு இக் கொள்கை உதவியாக இருத்தல் வேண்டும். எனினும் தேசிய மின்சார கொள்கையின் வலு சேவைகள் வழங்கலின் கீழ் குறைந்த கிரயம் நீண்டகால உற்பத்தி பரம்பல் திட்டத்தின் (Least Cost Long Term Generation Expansion Plan) இனங்காணப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களை திட்டமிட்டவாறு செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்திய போதும் தேசிய மின்சார கொள்கையின் இலக்குகள் மற்றும் இலங்கை மின்சார சபையின் மூலம் தயாரிக்கப்படுகின்ற முன்மொழியப்பட்ட நீண்ட கால உற்பத்தித் திட்டத்துடன் 2022-2041 இணங்கவில்லை.

2021.08.20 ஆந் திகதிய அமப/21/1628/318/046 உடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் 2021.09.13 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது கீழே காட்டப்பட்டுள்ள கொள்கை இலக்குகளுக்காக அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- 2030 ஆம் ஆண்டளவில் மின்சக்தி உற்பத்தியில் 70 சதவீதம் புதுப்பிக்கத்தக்க மூலாதாரங்கள் மூலம் பெற்றுக்கொள்ளல்

- எதிர்காலத்தில் புதிய அனல் மின்உற்பத்தி நிலையங்களை தாபிக்க நடவடிக்கை எடுக்காமை (No capacity addition for coal power plants)

- 2050 ஆம் ஆண்டளவில் மின்சக்தி உற்பத்தியில் காபன் நடுநிலையை ஏற்படுத்தல் (Carbon Neutrality)

மேலும் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் எரிசக்தி துறைக்குரிய பொதுவான கொள்கை வழிகாட்டுதல்களின் அடிப்படையில் குறைந்த கிரய நீண்ட கால உற்பத்தித் திட்டம் 2022-2041 ஐ தயாரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு உத்தரவிடுமாறு எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை பணிப்புரை விடுத்திருந்தது. எனினும் இலங்கை மின்சார சபை 2021 யூலை மாதம் குறைந்த கிரய நீண்ட கால உற்பத்தித் திட்டத்தின் 2022-2041 வரைவினை பொ.ப.ஆ குழுவிற்கு சமர்ப்பித்திருந்ததுடன் தற்போதய கொள்கைகக்கு இணங்காமையால் 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி பொ.ப.ஆ குழுவின் கடிதத்தின் பிரகாரம் அரசின் புதிய கொள்கைக்கு இணங்கும் வகையில் 2022-2041 இற்கான நீண்ட கால உற்பத்தித் திட்டத்தை மீண்டும் தயாரித்து 2022 யூலை 30 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இலங்கை மின்சார சபையினால் அரசின் கொள்கைக்கு இணங்காத வகையில் 2021 ஒக்தோபர் மாதம் 2022-2041 இற்கான குறைந்த கிரய நீண்ட கால உற்பத்தி திட்டம் வெளியிடப்பட்டது. அதில் 2041 ஆம் ஆண்டு வரை புதுப்பிக்கத்தக்க மூலாதாரங்களிலிருந்து மின்சக்தி உற்பத்தி 50 சதவீதமாக இருந்ததுடன் 02 அனல் மின் ஆலைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2021 செப்தம்பர் 22 ஆந் திகதி ஐக்கிய நாடுகளின் வலுச்சத்தி மாநாட்டில் இலங்கை சனாதிபதியாலும் இந்த இலக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது தொழிற்பாட்டில் உள்ள லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் மாத்திரம் வருடாந்தம் சுமார் 5,000 தொன் அளவு காபனீரொட்சைட் வாயு ($CO_2$) வெளியிடப்படுவது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாக இருந்த போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.1.1.3 மையப்படுத்தப்பட்ட இணைப்பு வழிமுறையின் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்ட அனுமதிக்காக செலவாகும் 02 வருடங்களுக்கும் அதிகமான நீண்ட காலம் குறைக்கப்படும் என தேசிய கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக முயற்சியாளர்களது பெறுமதியான காலம், பணம்,

முயற்சிகள் என்பன வீணான முறையில் செலவிடப்படுவதன் காரணமாக அவர்கள் நம்பிக்கை இழந்து செயற்திட்டங்களை கைவிட வேண்டி ஏற்படல் மற்றும் புதிய வலு வகைகளை தேசிய மின்சார வலையமைப்பினுள் இணைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் இதன் மூலம் தடைப்பட்டிருந்தது.

3.1.1.4 மின்சக்தி அமைச்சின் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்ட அனுமதி இணைப்பிற்காக மற்றும் காணி பொறுப்பேற்றல் தொடர்பான அரச நிறுவனங்கள் மற்றும் வரி அமைச்சின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழு 2019 இறுதியில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் இதுவரை அக்குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நியமிக்கப்படாமை இச் செயற்பாடானது முறையாக செயற்படுவதற்கும் தேசிய கொள்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் நோக்கங்களை குறித்த கால எல்லையினுள் செயற்படத்துவதற்கும் அதன் மூலம் எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்துகொள்வதற்கும் தடையாக இருந்தது.

### 3.1.2 சட்டரீதியான பின்னணி

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபை சட்டத்தின் மூலம் மீள் இயக்கத்திற்கு உட்படுத்தக்கூடிய வலு வளங்களை (RE) இனங்காணல், மதிப்பீடு செய்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் வலுக்களின் குறைந்த பொருளாதாரச் செலவுக்கு (இறக்குமதி செய்யப்பட்ட வலுக்களில் தங்கியிருப்பதை குறைத்தல்) அமைய வலு வினைத்திறனை அதிகரிக்கும் சந்தர்ப்பம் இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்தச் சட்டம், 2002 இன் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழச் சட்டம் ஆகியன பிரதானமாக சம்பந்தப்படுகின்றன.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கமைவாக அனைத்து கொள்வனவுகளும் போட்டி அடிப்படையிலான விலைமனுக் கோரல் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் நிலைபேறான வலு அதிகார சபை அனுமதிப்பத்திர உரிமையாளர்களிடமிருந்து முன்பு போல் கொள்வனவு செய்ய முடியாது. இச் சட்டரீதியான நிலை அவ்வாறிருக்க நிலைபேறான வலு அதிகார சபை அச் சட்டத்தின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்குவதை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தது. எனினும் இலங்கை மின்சார சபையின் மூலம் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தப்பட்ட) சட்டத்திற்கமைய நிலைபேறான வலு அதிகார சபை அனுமதிப்பத்திர உரிமையாளர்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் திடீரென இடைநிறுத்தியிருந்தது. அதனடிப்படையில் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தப்பட்ட) சட்டத்தின் 43(4) பிரிவிற்கமைவாக புதிய உற்பத்தி இயந்திரமொன்றினை வழங்குதல், நீடிப்பதற்காக போட்டி அடிப்படையிலான விலைகளின் கீழ் குறைந்த செலவின் அடிப்படையிலான விலைமனுக் கோரல் மூலம் வலுவினை கொள்வனவு செய்வதற்கான நியமத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்னர் இருந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட அறவீட்டு முறையின் (Standard Tariff) கீழ் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2007 இன் 35 ஆம் இலக்க நிலைபேறான வலு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் இக் கொள்வனவு ஒப்பந்தங்கள் (SPPA) தனியார் துறை முதலீட்டாளர்களை

ஊக்குவிக்கும் நோக்கில் அமைச்சரவை அனுமதித்த ஏற்றுக்கொள்ளப்பட்ட அறவீட்டு முறையின் (Standard Tariff) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தியின் போது இக் குழப்பமான நிலைமையினை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மிகவும் முக்கியமாக இருந்த போதும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2 புதிய புதுப்பிக்கத்தக்க வலு (NRE) மூலங்களின் அபிவிருத்திச் செயன்முறை

#### 3.2.1 2030 மற்றும் 2050 அளவில் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகளுக்கான குறுகிய கால இலக்குகள்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவும் தற்போதய அரச கொள்கையின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலு வகைகள் 70 சதவீதம் வரை அதிகரித்துக்கொள்வதற்கும் தேசிய வலு கொள்கைக்கு அமைவாக 2050 இல் புதுப்பிக்கத்தக்க வலுக்களின் உச்சத்திற்கு செல்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று 02 வருடங்களுக்கு ஒரு முறை குறித்த நீண்டகால திட்டங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அதனடிப்படையில் குறித்த நீண்டகால திட்டங்களை நோக்கிய பயணத்தில் அடைந்துகொள்ள வேண்டிய குறுகிய கால இலக்குகள் இனங்காணப்படாது குறித்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை அவதானிக்க முடிந்தமையினால் அக் குறுகிய கால அடிப்படையிலான குறித்த திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதன் முன்னேற்றத்தினை கவனத்தில் கொள்வதற்கு இதன் காரணமாக முடியாமல் இருந்தது.

#### 3.2.2 செயற்திட்டத்திற்கான அனுமதிப்பத்திரம் பெறல்

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபைச் சட்டம் மற்றும் விளக்கமான வழிகாட்டல் கொவைக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்பும் பின்பற்றப்பட்ட NRE செயற்திட்டங்களுக்கான அனுமதி வழங்கும் வழிமுறைகளின் தொடர்ச்சியான பந்திகளில் விபரிக்கப்படும் பலவீனங்கள் காரணமாக NRE செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை பின்னடைந்துள்ளதுடன் அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

2019.12.31 திகதியன்று நிலைபேறான வலு அதிகாரசபையின் புதிய புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களின் பங்களிப்பு மொத்த உற்பத்தி இயலளவின் 11 வீதமாக மாத்திரமே காணப்பட்டது.

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலாதாரங்கள் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.வொ) |
|---|---|---|
| சிறிய மின் நிலையங்கள் | 206 | 417.26 |
| காற்றாலை மின் நிலையங்கள் | 15 | 128.15 |
| உயிர் மாஸ் மின்நிலையங்கள் | 12 | 43.53 |
| சூரிய மின் நிலையங்கள் - | 14 | 57.36 |

| | | |
|---|---|---|
| வீட்டுக் கூரை மீதான நிலையங்கள் தவிர (Tender 1 MW *6) | | |
| | -------- | --------- |
| மொத்தம் | **247** | **646.30** |
| | ==== | ===== |

**3.2.2.1** புதிய புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்ட அபிவிருத்திக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டல் கோவை மிகவும் சிக்கலான ஒரு செயன்முறையைக் கொண்டதாகும். அது மிகவும் எளிதான வினைத்திறன் மிக்க ஒரு செயன்முறையாக இருத்தல் வேண்டும். இது முதலீட்டாளர்களுக்கு தேவையான அனுமதிகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத வகையிலான அதிக முயற்சியையும் காலத்தையும் விரயம் செய்ய வேண்டிய ஒரு செயன்முறையாக மாறியுள்ளது. அபிவிருத்தியாளர்கள் உற்பத்தி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட 10 அரச நிறுவனங்களினதும் (Line Agencies) அனுமதியினைப் பெற வேண்டும். வலு அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் சந்தர்ப்பத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன சீவராசிகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களிலிருந்து பெற்ற அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகியதன் காரணமாக மீண்டும் அவ்வனுமதிகளின் காலத்தை நீடித்துக்கொள்வதற்கான தேவை செயற்திட்ட அபிவிருத்தியாளருக்கு ஏற்படுகின்றது. இதன் காரணமாக உற்பத்தி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தியாளருக்கு 02 தொடக்கம் 05 வருடங்கள் வரையிலான காலத்தினை செலவிட வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.2.2.2** 2016.03.04 திகதிய PE/TECH/D/06/01 இலக்க மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சரினால் வெறியிடப்பட்ட புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்டக் கட்டளை 01 இன் பிரகாரம் எதிர்காலத்தில் மிகவும் எளிதான ஒரு வழிமுறையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவ்வழிமுறை இலகுபடுத்தப்படாததன் காரணமாக குறித்த செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் மேலும் தாமதம் காணப்பட்டது.

**3.3 நிலைபேறான வலுச்சக்தி அதிகாரசபையின் கீழ் செயற்திட்டங்களை செயற்படுத்தல்**

**3.3.1 புதிய புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்டத்தினை செயற்படுத்தல்**

வலு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த போதும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு காரணங்களினால் 58 செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் தற்பொழுது இடை நிறுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த 58 செயற்திட்டங்களின் மூலமும் 0.03 மெகாவொட் இயலளவிலிருந்து 10 மெகாவொட்டிற்கு இடைப்பட்ட 129.75 மெகாவொட் மின்சார இயலளவினை தேசிய மின்சக்தி தொகுதிக்கு இணைத்துக்கொள்ள முடியாது போயுள்ளது. (இணைப்பு 1)

குறித்த செயற்திட்டங்களின் சுருக்கம் வருமாறு.

(அ) வலு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன விலங்குகள் திணைக்களம் ஆகிய

நிறுவனங்களிலிருந்து பெற்ற அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகியதன் காரணமாக மீண்டும் அவ்வனுமதிகளின் காலத்தை நீடித்துக்கொள்வதற்கான தேவை செயற்திட்ட அபிவிருத்தியாளருக்கு ஏற்படுவதுடன் இதன் போது குறித்த நிறுவனங்களினால் அவ்வனுப்பத்திரங்களின் காலத்தை நீடிப்பதற்கு மறுத்தமை மற்றும் அனுமதி வழங்கல் தாமதமடைந்ததன் காரணமாக நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாத 23 மெகாவொட்இயலளவைக் கொண்ட 13 செயற்திட்டங்கள் ஆகவிருந்தன.

(ஆ) காணி பொறுப்பேற்றலில் காணப்பட்ட தாமதம் காரணமாக 13 மெகாவொட் இயலளவைக் கொண்ட 12 செயற்திட்டங்கள் ஆக இருந்தன.

(இ) இலங்கை மின்சார சபையினால் வலு கொள்வனவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படாமை காரணமாக 80 மெகாவொட் இயலளவைக் கொண்ட 25 செயற்திட்டங்கள் ஆகவிருந்தன.

(ஈ) வேறும் பல்வேறு காரணங்களினால் 14 மெகாவொட் இயலளவைக் கொண்ட 8 செயற்திட்டங்கள் அடிப்படையில் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

இச் சிக்கலான செயன்முறை இறுதி கட்டத்தை அடைந்ததன் பின்னரும் இவ்வாறான நிலைமைக்கு மீண்டும் மீண்டும் தொழில் அதிபர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றமையினால் அவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றமை காரணமாக குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தடையாக அமைந்திருந்தது. முகாமைத்துவத்தின் தலையீட்டின் மூலம் இத் தாமதங்களைத் தடுப்பதற்கான சந்தர்ப்பம் இருந்த போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 அனுமதி கிடைத்திருந்த போதும் ஒப்பந்தம் கைச்சாத்திடாமை

நிலைபேறான வலு அதிகாரசபையின் கடமைப் பொறுப்புகளின் கீழ் செயற்திட்ட அனுமதி வழங்கும் குழுவில் (PAC) அனுமதி பெறப்பட்ட 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிலைபேறான வலு அதிகாரசபையின் மூலம் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருந்த மற்றும் வலையமைப்பு இணக்கப்பாட்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள 4,014.85 மெகாவொட் ஆகிய 1,374 செயற்திட்டங்களின் தொழிற்பாடுகள் போட்டி அடிப்படையிலான விலைமனு கோரலினுள் நுழைந்தமை காரணமாக இலங்கை மின்சார சபை *மின்சாரத்தினை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதன் போது இறுதி கட்டமான உடன்படிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பம் வரை வந்து அச்செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்ட 30 செயற்திட்டங்களும் தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கிய 130 செயற்திட்டங்களும் காணப்பட்டன. இந்நிலைமைக்கு அடிப்படை காரணம் 2017 ஆம் ஆண்டின் ஆரம்ப முதல் காணப்பட்ட நடைமுறை ஒரே தடவையில் இடைநிறுத்தப்பட்டமையாகும். இதற்குரிய சட்ட பின்னணி 3.1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளதுடன் இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய விரிவான தகவல் பின்வருமாறாக இருந்தன.

| விபரங்கள் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.வொ) |
|---|---|---|
| உடன்படிக்கை கைச்சாத்திடாத | 30 | 49.33 |
| தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள (அபிலா. கடிதங்கள் வழங்கப்பட்ட ) | 53 | 127.61 |
| தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள (அபிலா. கடிதங்கள் வழங்கப்படாத) | 77 | 110.67 |
| வலையமைப்பிற்கு தொடர்புபடுத்தப்பட்ட | 1214 | 3727.23 |
| மொத்தம் | **1374** | **4014.84** |

*"*மின்சாரத்தினை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம்" எனப்படுவது வினியோகித்தல் அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு மின் வலுவினை விற்பனை செய்யும் செயற்பாட்டிற்காக மாத்திரம் மின் வலுவினை மொத்தமாக அல்லது மின்சார உற்பத்தி இயலளவினை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கு மின்சார உற்பத்தி அனுமதிப்பத்திர உரிமையாளர் ஒருவருடன் மின் நிலைய அனுமதிப்பத்திர உரிமையாளரினால் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தமாகும்.*"

**3.3.3 கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை துரிதமாக கருத்திற் கொள்ளல்**

2017 ஆம் ஆண்டு முதல் இதுவரை நிலைபேறான வலு அதிகாரசபையின் மூலம் தொடர்ச்சியாக சூரிய வலு, சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உட்பட 144 மின் நிலையங்களை அமைப்பதற்காக அபிவிருத்தியாளர்களிடமிருந்து பணத்துடன் விண்ணப்பங்களையும் பெற்றுக் கொண்டு இலங்கை மின்சார சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் தொடர்பாக இதுவரையில் எவ்வித முன்னேற்றங்களும் தென்படவில்லை. விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 7 வகைகளின் கீழ் 144 செயற்திட்டங்களுக்காக கையளிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைவான இயலளவு மெகாவொட் 699.96 ஆக இருந்ததுடன் அச் செயற்திட்டங்களுக்காக விண்ணப்பிக்கும் பொழுது அறவிடப்பட வேண்டிய கட்டணமாகிய ரூபா. 42,233,000 அதிகார சபையினால் பெறப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மேற்குறிப்பிட்டவாறு தொடர்ந்தும் கையளிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான அனுமதி வழங்கல் தொடர்ந்தும் தாமதமாகி வந்துள்ளது. இத் தாமதத்திற்கான பிரதான காரணமாக அவதானிக்கப்பட்டது குறித்த இரண்டு நிறுவனங்களுக்கிடையிலுமான இணைப்புச் செயன்முறையில் காணப்பட்ட குறைபாடுகளாகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள (அபிலா. படிதங்கள் வழங்கப்பட்ட )

| மூலம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.வொ) | விண்ணப்பக் கட்டணங்கள் கிட்டிய (ரூபா) |
|---|---|---|---|
| --------------- | ----------------------------- | --------------- | ---------------------- |
| உயிர் உரிமை | 11 | 64.10 | 3,755,000 |
| திண்மக் கழிவு | 18 | 106.30 | 6,215,000 |
| நீர் மின் | 33 | 61.76 | 4,738,000 |
| சூரிய சக்தி | 71 | 384.00 | 22,750,000 |
| காற்றாலை | 9 | 81.50 | 4,525,000 |
| அனல் | 1 | 2.00 | 150,000 |
| ஏனைய | 1 | 0.30 | 100,000 |
| | ------- | --------- | --------------- |
| | **144** | **699.96** | **42,233,000** |
| | ==== | ===== | ======== |

## 3.4 குறைந்த கிரய நீண்டகால பிறப்பாக்கி விரிவாக்கல் திட்டம் (Least Cost Long Term Generation Expansion Plan)

### 3.4.1 திட்டத்தை தயாரித்தல்

இது இ.மி.ச. பிறப்பாக்கி திட்டமிடல் பிரிவினால் இரண்டு தசாப்த காலத்திற்கு தயாரிக்கப்படுவதுடன் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்குஅனுப்பிவைக்க வேண்டும் 02 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மீளாய்வு செய்யப்படுகின்றது.

### 3.4.2 நீண்டகால பிறப்பாக்கி விரிவாக்க திட்டத்தின் (LTGEP) பிரகாரம் புதுப்பிக்க கூடிய மின்சக்தி இலக்குகள்

விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| மூலம் | LTGEP 2015-2034(MW) | LTGEP 2018 - 2037(MW) | வேறுபாடு | செயலாற்றல் 2019 (MW) |
|---|---|---|---|---|
| சிறிய மின் நிலையங்கள் | 388 | 359 | (29) | 417 |
| காற்று | 254 | 194 | (60) | 128 |
| அனல்ர் | 99 | 44 | (55) | 44 |
| சூரிய சக்தி நிலையங்கள் வீட்டு கூரை மீதான சூரிய பெனல் உட்பட | 61 | 305 | 244 | 318 |

குறித்த அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இலங்கை மின்சார சபையின் மூலம் வெளியிடப்பட்டுள்ள LTGEP 2015 – 2034 மூலம் காற்று மற்றும் உயிரியல் இயக்க மின் நிலையங்களின் மூலம் 2019ஆம் ஆண்டின் இறுதியில் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகள் LTGEP 2018 – 2037 மூலம் 29 மெகாவொட் தொடக்கம் 60 இற்கு இடைப்பட்ட அளவில் குறைக்கப்பட்டுள்ளதுடன் காற்று வலு மற்றும் உயிரியல் இயக்க மின் உற்பத்திக்காக 2019 ஆம் ஆண்டளவில் அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகளும் சிறிய நீர் மின் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய திட்டங்களின் மூலம் அடையப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) இலங்கை மின்சார சபையின் மூலம் LTGEP 2015 – 2034 இல் எதிர்பார்க்கப்படும் செயலாற்றலினை அடைந்துகொள்ளத் தவறியமையின் காரணமாக LTGEP 2018 – 2037 மிகவும் எளிதான இலக்குகளை உள்ளடக்கி அனுமதி பெறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதேபோன்று சிறிய நீர் மின் நிலையங்கள் தொடர்பிலான இலக்குகள் மற்றும் செயலாற்றல் தர்க்க ரீதியற்றதும் முயற்சியற்றதுமாகும் என்பது தெளிவாகின்றது.

(இ) LTGEP 2018 – 2037 அடிப்படையில் 2020ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டின் இறுதியில் 18.4 வீதமான புதுப்பிக்கத்தக்க வலு மின் வினியோகத்தினை அடைந்துகொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அடையப்பெற்ற உண்மையான பங்களிப்பானது 12 வீதமாக மாத்திரமே காணப்பட்டது. அதாவது புதிய புதுப்பிக்கத்தக்க வலுக்களுக்கிடையில் சிறிய நீர் மின் நிலையங்களின் பங்களிப்பு 7 வீதமாகும். சூரிய மற்றும் காற்று வலு பங்களிப்பு மொத்த வலு வினியோகத்தில் 5 வீதம் மாத்திரமே.பாரியளவிலான நீர் மின்நிலையங்களின் உற்பத்தி இயலளவை உயர்ந்த அடிப்படையில் அடைந்துள்ள பின்னணியில் மேலும் அதிகரித்துக் கொள்வதற்கும் இயலுமை புதிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி மூலாதாரங்கள் மூலம் மாத்திரமாகும்.

(ஈ) எதிர்பார்க்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தி இலக்கினை அடைந்துகொள்ள முடியாமல் போனமைக்கு இலங்கை மின்சார சபை 2017ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறவீட்டு முறையின் அடிப்படையில் (Standard tariff basis) புதுப்பிக்கத்தக்க வலுவினை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதை இடைநிறுத்தியதும் காரணமாக அமைந்திருந்தது. இதுவரை சிறிய நீர் மின் நிலையங்களுக்காக எவ்வகையான விலைமனுக் கோரலும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக சிறிய அளவிலான நீர் மின் நிலையங்களை நிர்மாணிக்கும் நோக்கம் கொண்ட வினியோகஸ்தர்கள் இத் துறையினுள் நுழைவது தடுக்கப்பட்டிருந்தமை மற்றும் இலங்கை மின்சார சபைக்கு குறைந்த விலையில் மின்சாரத்தினை கொள்வனவு செய்வதற்காக இருந்த சந்தர்ப்பமும் இல்லாமல் போயுள்ளது. இதன் காரணமாக தனியார் டீசல் மின் நிலையங்களின் மூலம் அதிக விலைக்கு மின்சாரத்தினைக் கொள்வனவு செய்தல் மற்றும் அந்நியச் செலாவனி வெளிநாடுகளைச் சென்றடைதல் கடந்த வருடங்களில் படிப்படியாக அதிகரித்திருந்தது. எனவே 2017 உடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டு மொத்த அவசர கொள்வனவுகள் அதிகரிப்பு வீதம் 14 என அவதானிக்கப்பட்டது. விபரம் இணைப்பு 02இல் காட்டப்பட்டுள்ளது.

**3.4.3 புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான போட்டி அடிப்படையிலான விலைமனுக் கோரல்**

**3.4.3.1** இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலு வினியோகமானது 2017இன் ஆரம்பம் வரையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டண அடிப்படையில் (Standard tariff basis) செயற்படுத்தப்பட்டதுடன் புதிய ஒரு துறையாக இருப்பதுடன் அதிக முதலீடு தேவைப்படுவதன் காரணமாக உள்நாட்டு முதலீட்டாளர்களை கவர்வதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டண முறை அமுல்படுத்தப்பட்டது.

பிரதானமாக சிறிய நீர் மின் நிலையத் துறை இதன் கீழ் உயர் செயலாற்றல் மட்டத்தினை அடைந்துகொள்ள முடிந்தது. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் போட்டி அடிப்படையிலான விலை அடிப்படையில் ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு இலங்கை மின்சார சபையினால் தீர்மாணிக்கப்பட்டது. அதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட மின்சார கொள்வனவு செய்தல் ஒப்பந்தம் (SPPA) கைச்சாத்திட்ட செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுவரை சிறிய நீர் மின் நிலையங்கள், சூரிய மின் நிலையங்கள், காற்று மின் நிலையங்கள் ஆகிய புதிய புதுப்பிக்கத்தக்க வலு துறையில் முதலீடு செய்யும் நோக்கமுள்ள 144 புதிய முதலீட்டாளர்கள் இலங்கை நிலைபேறான வலு அதிகார சபையில் பதிவு செய்து காத்திருத்தல் பட்டியலில் இருந்ததுடன் 1,374 முதலீட்டாளர்கள் மின் நிலையங்களை நிர்மாணிக்கும் செயன்முறையின் பல்வேறு கட்டங்களில் இணக்கத்தை நிவர்த்தி செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

**3.4.3.2** அதன் பிரகாரம் நியம கட்டண விலை முறைமை, இடைநிறுத்தப்பட்டு 2017 ஜனவரியில் இருந்து தற்போது 2019 வரை இ.மி.சபையால் சூரிய மற்றும் காற்றாலை மின் செயற்திட்டங்களுக்காக மாத்திரம் (191 மெகாவொட்) போட்டி கூறுவிலை கோரிப்பட்டுள்ளதுடன் அந்த திட்டங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு

| செயற்திட்டம் | நிலைய ங்களின் அளவு | மொத்த இயலளவு **(MW)** | செயற்திட்டங் களின் முன்னேற்றம் |
|---|---|---|---|
| ---------------------------- | --------- | ----------- | -------------------------------------------------- |
| 2x10 MW காற்றாலை மின்நிலையம் | 2 | 20 | 2020 யூன் மாதத்தின் போது தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டுள்ளது. |
| 60x1 MW காற்றாலை மின்நிலையம் | 35 | 35 | ஆரம்பிப்பதற்கு உள்ளவை (Pending commissioning) - 22<br>ஆரம்பிக்கப்பட்டுள்ள (Commissioned)- 13 |
| 90x1 MW காற்றாலை மின் நிலையம் | 71 | 71 | உடன்படிக்கை கைச்சாத்திட்ட-17 இல் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டவை - 10, உடன்படிக்கை கைச்சாத்திட உள்ளது- 53<br>அமைச்சரவை அங்கீகாரத்திற்காக-1 |
| 2x10 MW காற்றாலை மின் நிலையம் | 2 | 20 | காணி வழங்கப்பவில்லை (Yet to be land clearance, Pending PPA) |
| காற்றாலை மின் நிலையம் (1MW-10MW) | 4 | 35 | கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வகின்றது ஆற்றாலை மின்நிலையம் |
| காற்றாலை மின் நிலையம் (பயிர் செய்கையுடன்) | 1 | 10 | உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.. |
| | **---------** | **----------** | |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | **114**<br>==== | **191MW**<br>====== | |

குறித்த அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) 01 மெகா வொட் அளவிலான 114 மின் செயற்திட்டங்கள் (146 மொ வொட்) இற்காக மாத்திரம் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதில் 2019 ஆம் ஆண்டிடின் திசெம்பர் மாத இறுதி வரையில் தேசிய மின்சார முமைமைக்கு மெகாா வோட் 01 வீதம் 06 செயற்திட்டங்களிலிருந்து மாத்திரமாகும். 2 காற்றாலைகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் 60 மொ வொட் இயலளவுடன் தேசிய மின்சார முறைமைக்காக சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கு இடையெ 20 மெகாவொட் சூரிய மன் செயற்திட்டங்கள் 2 இற்கு காணியை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தற்போது செயற்படுத்தப்படும் 2022-2041 இன் பிரகாரம் சூரிய மற்றும் காறாறாலை சக்தி புதுப்பிக்ககூடிய மின் அபிவிருத்தி துறையில் எதிர்பார்த்த இலக்கை நோக்கி அடைவில் சவால் வாய்ந்ததாக அவதானிக்கப்பட்டது.

குறித்த தகவல்கள் பின்வருமாறு

| புதுப்பிக்ககூடிய சக்தி மூலம் | **2020.12.31**இல் உள்ளவாறான செயலாற்றல் **MW** | இலக்கிடப்பட்ட செயலாற்றல் **2022 MW** | இலக்கிடப்பட்ட செயலாற்றல் **2030 MW** |
|---|---|---|---|
| சிறிய மின் நிலையங்கள் | 410 | 464 | 554 |
| காற்றாலை மின் நிலையங்கள் | 179 | 268 | 1,013 |
| உயிர் மின் நிலையங்கள் | 50 | 81 | 120 |
| சூரிய சக்தி நிலையங்கள் | 425 | 1,039 | 2,684 |

இதன்படி, புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட சந்தர்பத்திலிருந்து தேசிய மின் இணைப்புக்கு தொடர்புபடுத்தும் சந்தர்ப்பம் வரை சுமார் இரண்டு வருட காலம் எடுப்பதாகவும் காற்றாலை மழன்நிலைய அபிவிருத்தி தொடர்பாக 2022 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் இலக்கு 268 மெகாவொட் எனவும், 2020 ஆம் ஆண்டு இறுதி அளவில் 179 மெகாவாட் தேசிய மின் முறைமைக்கு

வழங்கப்படுவதும் அவதானிக்கப்பட்டது. வுள்ளதாகவும் காணப்பட்டது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் இறுதி அளவில் 268 மெகா வொட் இலக்கை நோக்கி அடைந்துகொள்ள வேண்டிய போதிலும் தற்போது 60 மெகா வொட் இயலளவிற்காக மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

(இ) 2020 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையில் 425 மெகாவாட் சூரிய சக்தி திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன, மேலும் 2022 மற்றும் 2030 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கிடப்பட்ட அபிவிருத்தி முறையே 1,039 மெகாவொட் மற்றும் 2,684 மெகா வொட் ஆகும். 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அபிவிருத்தி செயற்பாட்டில் மின்சக்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட 46 செயற்திட்டங்கள் (91 மெகா வொட்), தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட 33 திட்டங்கள் (69 மெகா வொட்) மற்றும் இதுவரை ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்படாத ஒரே ஒரு திட்டம் (10 மெகா வொட்) மாத்திரமாக இருந்தமையால் புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வது சிக்கலான விடயமொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.4 செயற்பாட்டிலுள்ள NRE செயற்திட்டங்களிலிருந்து கொள்வனவு செய்த மின்சாரத்திற்காக குறித்த பிரகாரம் கொடுப்பனவு செய்தல்

குறித்த விபரங்கள் பின்வருமாறு

**3.4.4.1** நியம மின்சார கொள்வனவு ஒப்பந்தத்தின்படி, மின் உற்பத்தி நிலையங்களில் மீட்டர் வாசிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பணம் செலுத்தப்பட வேண்டிய போதும், 2021 யூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்கான கட்டணம் 2021 திசெம்பர் மாதம் வரையிலும் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழங்குனர்களிடமிருந்து இலங்கை மின்சார சபையினால் கொள்வனவு செய்யப்படும் மின்சாரத்திற்கான கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சுமார் 06 மாதங்கள் அளவில் தாமதம் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. நியம திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவிற்காக வழங்குனருக்கு வட்டி செலுத்த வேண்டுமென நியம மின்கொள்வனவு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் தாமதக் கொடுப்பனவிற்காக வட்டித் தொகையொன்று (Prime Rate) கொடுப்பனவு செய்வதில் ஆபத்து தொடர்பாக அவதானிக்கப்பட்டது.

**3.4.4.2** அவ்வாறே பணம் செலுத்துவதில் ஏற்படும் தாமதம் காரணமாக முதலீட்டாளர்களுக்கு கடன் தவணையை செலுத்துவதில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதுள்ளதுடன் முதலீட்டாளர்களுக்கு நிதி நிறுவனங்கள் வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் உயரும் அபாயம் உள்ளது. அதே நேரத்தில், நிதி ஆபத்து காரணமாக புதிய முதலீட்டை ஊக்கப்படுத்தாமை மற்றும் கேள்வி விலைகளை அதிகரிக்க கூடிய இயலுமை காணப்படுகின்றது.

### 3.5 பொது விடயங்கள்

### 3.5.1 மின்சக்தி உற்பத்தி தொடர்பாக தற்போது காணப்படும் சவால்கள்

2019 இல் மீளாய்வு செய்யப்பட்ட இலங்கையின் எரிசக்தி தொடர்பான தேசியக் கொள்கை மூலமும் 2021-09-13 ஆந் திகதியஅமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட வலுச்சக்தி தொடர்பான முக்கியக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் மூலம் இலங்கையின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறைகளை அடையாளம் கண்டுள்ளது. அதன் பிரகாரம், வலுச்சக்தி தொடர்பான குறைந்த செலவில் நீண்டகால உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டிய போதும் அத்திட்டம் அரசின் புதிய கொள்கைக்கு இணங்காத வகையில் தயாரிக்கப்பட்ட பின்னணியில் கோவிட் தொற்றுநோய் நிலைமையில் பொருளாதாரத்தை மீட்டெடுத்தல் மற்றும் இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கும் செலாவணி கையிருப்பு என்பது வலுச்சக்தி உற்பத்திக்கான எரிபொருளை இறக்குமதி செய்யும் போது தடையாக இருத்தல் மற்றும் மின்சார சபையின் தற்போதய நிதி நிலைமையில் தேவையான எரிபொருளைப் பெறுவதில் உள்ள சிரமம் காரணமாக மின்சாரத்திற்கான கேள்வியை தொடர்ந்து வழங்கும் போது புதுப்பிக்கதக்க வலுச்சக்தி தொடர்பில் கவனம் செலுத்துதல் தற்போது தெளிவாகின்றது.

### 3.5.2 சூரிய சக்தி போர் (Battle for Solar Power)

மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு மற்றும் நிலையான எரிசக்தி அதிகார சபையுடன் இணைந்து, நாட்டின் மின்சார பாவனையாளர்களுக்கு புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக சூரிய சக்தி என்ற சமூக மின் உற்பத்தித் திட்டம் 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. மின் பாவனையாளர்களின் வீடுகளின் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சோலார் பேனல்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய வலையமைப்புடன் இணைக்கும் வகையில் 2016 செப்டம்பர் 6 ஆம் திகதி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இது மூன்று முறைமைகளில் அதாவது தேறிய அளவிடல் (net metering) தேறிய கணக்கீடு (net Accounting) மற்றும் நெட் பிளஸ் (Micro Power Producers) என செயற்படுத்தப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டளவில் 1,000,000 இல்லத்தின் மூலம் 1000 மெகா வொட் இயலளவினை உற்பத்தி செய்வதற்கு இலக்கிடப்ப்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டு வரை 24,696 பாவனையாளர்களால் தேசிய வலையமைப்பிற்கு 269 மெகா வொட் இயலளவுடன மாத்திரம் தொடர்புபட்டிருந்தாக அவதானிக்கப்பட்டமு. இன் போது வருடாந்தம் அடையக்கூடிய இலக்குகளை இனங்காணலொன்று இடம்பெறாமையாம் அந்த இலக்குளை நிறைவேற்றும் போது தடையொன்று இருப்பதாக அவதானிக்கப்பட்டது. கொண்ட தேசிய மின்கம்பத்தில் நெட் மீட்டர், நெட் அக்கவுண்டிங் மற்றும் 2019 ஆம் ஆண்டு வரை மூன்று முறைகளில் இணைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

### 3.5.3 சுற்றுச்சூழல் பொருத்தம்

2015 நவம்பர் மாதத்தில் பிரான்சின் பாரிஸ் நகரில் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பு பாரிஸ் மாநாட்டின் (Paris Convention) 21 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கத்திற்காக இலங்கை போன்ற வளரும் நாடுகள் வளர்ந்த தொழில்மயமான நாடுகளால் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் பசுமை இல்ல வாயுக்களின் அதிக உமிழ்வு காரணமாக ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைக்கப்பட்ட அமைப்பின் (UNFCCC) பிரகாரம் அபிவிருத்தி அடைந்து வரும் பாதகமான காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்காக தேவையான நிதி தொழில்நுட்ப மற்றும் இயலளவு மேம்பாட்டை வழங்குதல் அபிவிருத்தி அடைந்த நாடுகளால் வழங்கப்பட வேண்டும். எனவே, ஒரு பங்காளி நாடாக, உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்டாலும் கூட, புவி வெப்பமடைதலை $2C^0$ இற்கும் குறைவாக வைத்திருக்க உலக சாசனத்திற்கு பங்களிப்பதாகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.5.3.1** 2016 ஏப்ரல் 22 ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இலங்கை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன் எரிசக்தி உற்பத்தி, போக்குவரத்துத் தொழில், கழிவுகள் மற்றும் காடுகள் என்பவற்றிலிருந்து கார்பனீரொட்சைட் (CO2), மீத்தேன் (CH4) மற்றும் நைட்ரசன் ஈரொட்சைட் (NO2) போன்ற பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தை குறைப்பது அதில் குறிப்பிட்ட பிரகாரமர்கும்.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை எரிசக்தித் துறையில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 20 சதவீதத்தால் குறைக்க வேண்டும், அதாவது நிபந்தனையின்றி தேசிய இயலளவில் 4 சதவீதம் மற்றும் நிபந்தனை இன்றி வெளியாரின் ஒத்துழைப்புடன் 16 சதவீதம் குறைக்க வேண்டும் என அவதானிக்கப்பட்டது. அதன் மாற்று எரிசக்திக்கு முழுமையான மாற்றத்தின் மூலம் மட்டுமே எட்டப்பட்ட உடன்படிக்கைகளை அடைய முடியும் என்றாலும், தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறான ஒரு காரியத்தை அடைவது இலகுவானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

**3.5.3.2** மின்சக்தி துறையில் காபன் அளவினைக் குறைப்பதற்கு (Nationally Determined Contributions (NDCs7) மூலம் எரிபொருள் மின்நிலையங்களுக்குப் பதிலாக புதுப்பிக்கத்தக்க இயற்கை எரிவாயு நிலையங்களை (LNG) அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் ஒரு நிலையத்தையேனும் இதுவரை செயற்படுத்தி இயக்கப்படவில்லை.

## 3.6 வலு தொடர்பான நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைதல் (Sustainable Development Goals-07)

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்ான நிகழ்ச்சி நிரல் 2015-2030 காலப்பகுதியில் செயற்படுத்தப்படவிருந்தது. இலங்கை அது தொடர்பாக 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலு அபிவிருத்தி சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. இலங்கை உலகின் பசுமை நாடுகளுக்கு (Greenest country) இடையே 39 ஆவது இடத்தை எடுத்துள்ளதுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தினை 2030 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு அரசு உட்பட தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. உரிய இலக்கை அடைந்து கொள்வது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

### 3.6.1 மொத்த வலுச் சக்தி உற்பத்தி இயலளவு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி உற்பத்தி

வலுச்சக்தி அமைச்சின் நிலைபேறான நோக்கங்களுக்கு 2030 அளவில் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி உற்பத்தி மொத்த வலுச் சக்தி உற்பத்தி இயலளவில் 70 சதவீதமாக இருக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தி மொத்த வலுச் சக்தி உற்பத்தி இயலளவின் 37 சதவீதம் மாத்திரமாகும்.

அதன் பிரகாரம் கடந்த 06 ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தி மொத்த இயலளவிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை முறையே 49 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையான வீச்சிலும் புதிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி இயலளவு 8 சதவீதம் முதல் 12 சதவீதம் வரையில் ஆகக்குறைந்த பங்களிப்பொன்று அவதானிக்கப்பட்டது.
விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த உற்பத்தி இயலளவு (கிகா வொட்) | புதுப்பிக்கத் தக்க மின்சக்தி இயலளவு (கிகா வொட்) | புதுப்பிக்கத்தக்க மின்சக்தி இயலளவின் % | புதிய புதுப்பிக்கத் தக்க மின்சக்தி இயலளவு (கிகா வொட்) | புதிய புதுப்பிக்கத் தக்க மின்சக்தி இயலளவின் % |
|---|---|---|---|---|---|
| 2015 | 13,090 | 6,371 | 49 | 1,467 | 11 |
| 2016 | 14,148 | 4,641 | 33 | 1,160 | 8 |
| 2017 | 14,671 | 4,523 | 31 | 1,464 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2018 | 15,305 | 6,913 | 45 | 1,832 | 11 |
| 2019 | 15,922 | 5,549 | 35 | 1,761 | 11 |
| 2020 | 15,71**9** | 3,911 | 25 | 1,866 | 1**2** |

**3.6.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

**3.6.2.1** நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் 2030 அளவில் அனைவருக்கும் ஏற்கக் கூடிய வகையில் விசுவாசமான மற்றும் நவீன மின்சக்தி மூலாதாரங்களுக்கு அணுகக்கூடிய வகையில் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மின் வழங்கலுடன் மக்கள் தொகை 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட 99.3 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டின் போது 99.9 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதும் மொத்த மின்சார வழங்கலில் புதிய புதுப்பிக்கக்கூடிய வலுச் சக்தி உற்பத்தி 37% ஆகும். இதில் புதிய புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி உற்பத்தி 12% ஆகும். இப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உற்பத்தி 895 மெகாவொட்டை அடைந்து கொள்வதற்கு 2,124 மில்லியன் கிலோகிராம் காபன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.6.2.2** நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் 7.3 இன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் மின்சக்தியை செயற்திறனாக அதிகரிக்கும் உலகளாவிய விகிதத்தை இரண்டு மடங்கு ஆக்குவதற்கு 2025 அளவில் 600 கிலோவொட் மணித்தியாலங்களை பாதுகாக்க வேண்டிய போதும் 2019 ஆம் ஆண்டில் மின்சக்தி கேள்வி முகாமைத்துவ சனாதிபதி விசேட செயற்பாட்டு படையணியால் (ODSM) வீட்டு பாவனையாளர்களுக்கு இடையே 10 மில்லியன் டயொட் அளவிலான வெளிச்சம் சலுகை விலையில் வழங்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. பரிந்துரைகள்

**4.1** தேசிய மின்சக்தி கொள்கையில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்களிப்பினை மேம்படுத்தலின் கீழ், ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை முறைமை செயற்பாட்டில் இருந்த காலப்பகுதியில் நிலைபேறான வலு அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்ட எனினும் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக தற்பொழுது முன்னேற்றமின்றி அனுமதி செயன்முறையின் பல்வேறு கட்டங்களில் காணப்படும் விண்ணப்பங்களை பொருத்தமான இடைக்காலச் செயற்திட்டமொன்றின் மூலம் போட்டி அடிப்படையிலான செயன்முறைக்கு உட்படுத்துவதன் மூலம் அபிவிருத்திக்கான நடவடிக்கை எடுத்தல்.

**4.2** 2017 ஜனவரி 01 முதல் இலங்கை மின்சார சபையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறவீட்டு முறையின் கீழ் மின்சாரத்தினைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படவுள்ள தற்பொழுது உற்பத்தி அனுமதிப்பத்திரம் உள்ள மற்றும் நோக்கக் கடிதம் வழங்கப்பட்ட 1,374 செயற்திட்டங்கள் சுமார் 03 வருடங்கள் தாமதமடைந்துள்ளதன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை விரைவாக எடுத்தல் பொருத்தமானதாகும்.

**4.3** தற்போதைய அரச கொள்கைக்கு அமைவாக 2030 ஆகும் பொழுது மொத்த புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தியை 70 வீதம் வரை அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதிகார சபையின் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் துறையின் உயர் செயற்பாட்டுப் பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக சூரிய மற்றும் காற்று வலு இயலளவினை 8,000 மெகாவொட் வரை அதிகரித்துக்கொள்ள வேண்டும். எனினும் சூரிய வலு வினைத்திறன் மட்டத்தினை அடையாமைக்கான காரணங்களாக அதிக வெலவு மற்றும் இலாபகரமான நிதி முறைமை காணப்படாமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.அதற்காக கடன் மற்றும் ஊக்குவிப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் ஊடாக தனியார் மற்றும் அரச துறைகள் இணைந்து தேவையான பலத்தினை சூரிய வலு உற்பத்திக்காக வழங்க வேண்டும்.

**4.4** 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபை சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கும் மற்றும் மின்சார உற்பத்தியினை 02 வருட காலப்பகுதியினுள் மேற்கொள்வதற்கு முடியாது போகும் சந்தர்ப்பத்தில் அல்லது நியமங்கள் மற்றும் விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் பணிப்பாளர் நாயகத்தினால் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஆலோசித்து விரைவாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

**4.5** புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்டங்கள் தொடர்பிலான பல்வேறு நிறுவனங்கள் மூலமான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக அதிகமான செயற்திட்டங்களை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் குறித்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அத் தாமதங்களை தவிர்ப்பதற்கான வழிமுறையொன்றினை தயாரித்தல்.

**4.6** இலங்கை மின்சார சபை 20 வருடங்களுக்கான நீண்ட கால உற்பத்தி திட்டத்தினை தயாரிப்பதுடன் அது 02 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரையாக்கம் செய்யப்படுகின்றது. இதன் மூலம் வரட்சியின் போது, மின் உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாடு முடங்கும் சந்தர்ப்பத்தில், அதேபோன்று அதிகரிக்கின்ற கேள்விக்கு ஒப்பீட்டு ரீதியில் மின் வெட்டினை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் இக் குறைந்த செலவு திட்டத்திற்கு

புறம்பாக அவசர கொள்வனவுகளுக்கான சந்தர்ப்பம் கிடைக்காத வகையில் கொள்கை மற்றும் இலக்கு வைக்கப்பட்ட திட்டங்கள் தாத்வீகமாக தொடர்பு படுத்தல் வேண்டும்.

4.7 மின்சார வினியோக தொகுதிகள் மற்றும் வினியோக வழிமுறைகளில் காணப்படும் பிரச்சினைகள் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதில் ஏற்படும் தாமதங்களுக்கு மட்டுமன்றி சிறிய அளவிலான செயற்திட்டங்களை அதிகரிப்பதிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதன் காரணமாக குறித்த அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முன்னுரிமையினை வழங்குவது முக்கியமாகும்.

4.8 சூரியக் கல தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்வதன் மூலம் சூரிய சக்தியினை களஞ்சியப்படுத்தி வைத்து மின்சாரத்திற்கான கேள்வி மிக அதிகமாகக் காணப்படும் உச்ச பயன்பாட்டு நேரங்களில் பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4.9 வரிச் சலுகை மற்றும் சாதாரண விலைகளை (Tariff Rates) அறிமுகம் செய்வதன் மூலம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல் வேண்டும். 2021 இன் 10 ஆம் இலக்க உன்நாட்டு வருமானங்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூன்றாம் உப பிரிவினை திருத்தியமைக்கும் பொது மெகாவொட் 100 இற்கு குறையாத சூரிய அல்லது காற்று வலுவினை உற்பத்தி செய்யும் தகுதியுடன் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் அவ் வலுவினை தேசிய வலு தொகுதிக்கு வினியோகிக்கும் ஏதேனும் புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்டத்திற்கு 07 வருடங்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டிருந்த போதும் சிறிய அளவிலான செயற்திட்டங்களுக்காக அச் சலுகை கிடைக்காமை மற்றும் சிறிய அளவிலான நீர் மின் திட்டங்கள் மற்றும் உயிரியல் இயக்க செயற்திட்டங்களுடன் தொடர்பின்றிக் காணப்பட்டமை காரணமாக சிறிய அளவிலான புதுப்பிக்கத்தக்க வலு தொழில் முயற்சியாளர்கள் பலர் அதிருப்தியடைவதனால் அதற்கான பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டம்.

4.10 பெறுகைகள் செயன்முறையின் பொதான சட்டரீதியான நிலைமைகள், தொழில்நுட்ப வேறுபாடுகள் மற்றும் வலையமைப்பு இயலளவு தொடர்பாக கொள்கை அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும்.

4.11 அரச மட்டத்தில் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க வலு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் குறைந்த செலவின் அடிப்படையில் மின்சாரத்தினை உற்பத்தி செய்து EPP இற்காக செலுத்தப்படும் அதிக செலவினத்தை (Capacity charges, Delay charges) தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

4.12 நிறுவன சமூக பொறுப்பு செயற்திட்டத்தினை (CSR) செயற்படுத்துவதன் மூலம் வலு அடிப்படை வசதிகள் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது எழுகின்ற சமூக எதிர்ப்புகள் மற்றும் சூழல் சார் தாக்கங்களை குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2022 பெப்ரவரி 08. ஆந் திகதி

| | இலக்கம் | செயற்திட்டத்தின் பெயர் | மூலம் | இயலளவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1830 | Mount Vernon | MHP | 1 | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிராகரித்தல் (நீர் வீழ்ச்சி) |
| 2 | 22900 | Upper Aberdeen | MHP | 0.6 | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரத்தை நீடிப்பதில் தாமதம் |
| 3 | 27580 | Upper Kadurugaldola | MHP | 2 | மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருகின்றது.. |
| 4 | 23190 | Kithulgala | MHP | 7.3 | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரத்தை நீடிக்காமை |
| 5 | 25000 | Norwood | MHP | 1 | காணி கையேற்றலில் தாமதம் - 2019/01/04 |
| 6 | 1260 | Ingiriya | MHP | 0.8 | காணி கையேற்றலில் தாமதம் – உரித்து நதுன் ரஜமஹா விஹாரை |
| 7 | 1450 | Maraliya Oya | MHP | 0.5 | காணி கையேற்றலில் தாமதம் – உரித்து நதுன் ரஜமஹா விஹாரை |
| 8 | 23980 | Siri Oya | MHP | 1 | காணி கையேற்றலில் தாமதம் – தற்போது நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 9 | 3240 | Upper Neluwa | MHP | 2 | காணி கையேற்றலில் தாமதம் – அரசின் காணி |
| 10 | 22920 | St Heliers | MHP | 0.75 | காணி கையேற்கும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது |
| 11 | 23160 | Dilaswala | MHP | 1.6 | காணி கையேற்கும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது |
| | | Athuru Oya Siyambalabokka | MHP | | |
| 12 | 23200 | (Rattota Oya) | MHP | 2 | காணி கையேற்பதில் தாமதம் |
| 13 | 23810 | Minumkumbura | MHP | 0.7 | காணி கையேற்றலில் தாமதம் – தற்போது நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 14 | 23900 | Lower Lemastota | MHP | 1 | காணி கையேற்றலில் தாமதம் |
| 15 | 26730 | Bathmedilla | MHP | 1 | காணி கையேற்றலில் தாமதம் |
| 16 | 26930 | Dewuldola 1 | MHP | 0.2 | காணி கையேற்றலில் தாமதம் |
| 17 | 3910 | Makeliya Dala | MHP | 0.45 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 18 | 22910 | Illukpelessa | MHP | 1.5 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 19 | 23010 | Haigran Oya - 11 | MHP | 0.65 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 20 | 23940 | Populaketiya | MHP | 1.4 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 21 | 24390 | Kunburugolla | MHP | 1.5 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 22 | 28200 | Anda Dola | MHP | 0.77 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 23 | 23830 | Ma Oya – Uda Dumbara | MHP | 4 | வன பாதுகாப்பு அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 24 | 1610 | Illukpelessa - 1 | MHP | 2 | நீர்ப்பாசன திணைக்களத்தினால் நிர்மாணத்தை இடைநிறுத்தியமை |
| 25 | 26600 | Deduru Oya | MHP | 2 | நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்திட்டமொன்றாகும் - தற்போது நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 26 | 1740 | Siybalagastenna | MHP | 0.95 | வலை மதிப்பீடு பெற்றுக்கொள்வதில் தாமதம் - CEA அங்கீகாரத்தை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளல் |
| 27 | 23510 | Dedugala | MHP | 1 | வலை மதிப்பீடு பெற்றுக்கொள்வதில் தாமதம் - CEA அங்கீகாரத்தை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளல் |
| 28 | 23990 | Upper Rathganga – 11 | MHP | 1 | வன சீவராசிகள் அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 29 | 26630 | Rannakanda | MHP | 1.75 | வன சீவராசிகள் அங்கீகாரத்தினை நீடிப்பதில் தாமதம் |
| 30 | 6240 | Hathmala Ella | MHP | 2 | DCCஅங்கீகாரம் தாமதமானமை – தற்போது காணி பெற்றுக்கொள்ளும் செயற்பாடு நிறைவேற்றப்பட்டு வருகின்றது |
| 31 | 23080 | Kegalu Oya | | 0.95 | DCCஅங்கீகாரம் தாமதமானமை – திருத்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமூக சிக்கல்கள் காரணமாக செயற்திட்டத்தின் திட்டங்கள் மாற்றப்பட்டமை மற்றும் அதற்காக MASL அங்கீகாரம் இதுவரை கிடைக்காமை |
| 32 | 6880 | Kiula | MHP | 2.8 | அரச சார்பற்ற அமைப்புக்களால் வழக்கு தொடரப்பட்டமையால் தாமதமாக இருந்ததுடன் அது தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 33 | 1940 | Morapitiya | MHP | 1.5 | வன பாதுகாப்பு அனுமதியை நீடிப்பதற்கான தேவை |
| 34 | 27400 | Bogahahena – Kukula | MHP | 2.3 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 35 | 23070 | Gemunupura | MHP | 1.3 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 36 | 23330 | Alupotha | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 37 | 23580 | Ehelagahawadiya | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 38 | 23600 | Wilgama | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கைச்சாத்திடாமை. |
| 39 | 23640 | AgCo Blackpool | MHP | 0.5 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 40 | 23920 | Palagolla | MHP | 0.4 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 41 | 23980 | Siri Oya | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 42 | 24410 | Maliboda | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 43 | 24730 | Parambe | MHP | 1.25 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 44 | 24880 | Blackwater 11 | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 45 | 25000 | Norwood | MHP | 1 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 46 | 26880 | Waharakawatta | MHP | 0.8 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 47 | 26890 | Magala Ganga 11 | MHP | 2.4 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 48 | 26890 | Kiriwela | MHP | 2.2 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 49 | 33250 | Amunumulla Micro | MHP | 0.03 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 50 | 25770 | Veemankamam | BMP - Dendro | 5.5 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 51 | 27060 | Maramba | BMP - Dendro | 3 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 52 | 23560 | Kaduwela | BMP - SWP | 10 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 53 | 29980 | Trilogy Waste | Waste Municipal | 3.4 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 54 | 36590 | Gonnoruwa IV | Battery Storage | 10 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 55 | 28690 | Solar Storage (Alutnuwara) | Solar Storage | 10 | ,yq;if kpd;rhurig kpd;rf;jp nfhs;tdT cld;gbf;ifapy; ifr;rhj;jplhik. |
| 56 | 37590 | Gonnoruwa IV | Battery Storage | 10 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 57 | 27040 | Sol Navitas (Pvt) Ltd | Solar Thermal | 10 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| 58 | 27050 | Elecsis Power (Pvt) Ltd | Solar Thermal | 10 | இலங்கை மின்சாரசபை மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமை. |
| | | **மொத்தம்** | | **129.75** | |

| 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|
| அலகு (KWh) | செலவினம் ரூபா மில்லியன் | அலகு (KWh) | செலவினம் ரூபா மில்லியன் | அலகு (KWh) | செலவினம் ரூபா மில்லியன் | அலகு (KWh) | செலவினம் ரூபா மில்லியன் |
| 695,405,402 | 19,405 | 387,321,376 | 11,581 | 448,004,994 | 12,675 | 811,000,000 | 22,200 |